**IN THE COURT OF THE I-st ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**OS.No.48/2021 - PW-4**

| | |
|---|---|
| Name | திரு.ஜெயராஜ் |
| Father Name | |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | |
| Age | |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.03.2025.

**முதல் விசாரணை**

நான் வழக்கில் 3ம் தரப்பினர். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை என உறுதி கூறுகிறேன்.

**குறுக்கு விசாரணை 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் –**

எனக்கு சாட்சியம் சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால், சரிதான். வாதிகள் அழைத்ததால் வந்தேன். எனக்கு எழுத, படிக்க தெரியும். நான் 60 வருடங்களாக பிஞ்சி கிராமத்தில் வசிப்பதால், முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நேரிடையாக தெரியும். 1ம் வாதி எனக்கு உறவினர் அல்ல. என்னுடைய வயது, முகவரியை காண்பிக்க நீதிமன்றத்தில் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

என்னிடம் ஆதார் கார்டு உள்ளது. 1ம் வாதிக்கும், கரீம்முதினுக்கும் 1ம் வாதியின் வீட்டில் 1981ம் ஆண்டில் திருமணம் நடந்தது. திருமணம் நடந்த தேதி, மாதம் நினைவில்லை. அந்த திருமணத்தில் நான், சிவா, செல்வம், ரவி, பரமானந்தம் மற்றும் சிலர் கலந்துகொண்டார்கள். அந்த திருமணத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. எவ்வளவு எடை கொண்ட கருப்பு மணியை கரிம்முதின் வாதிக்கு கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. அந்த திருமணத்திற்கு யார், யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. கரிம்முதினுக்கு 1282 சதுரடியுள்ள கட்டிடம் உள்ளது. கரிம்முதின் காலி இடமாக வாங்கி அதில் வீடு கட்டினார். கரிம்முதினுக்கு மற்றொரு திருமணம் ஆகி இரண்டு பிள்ளைகள் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், 1ம் வாதி சொல்லி எனக்கு தெரியவந்தது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 6வது பத்தியில் சொல்லியுள்ள சம்பவங்கள் எந்த தேதியில் நடந்தது என்று எனக்கு தேதி சரியாக தெரியவில்லை. 30 வருடங்களுக்கு முன்பு அந்த சம்பவம் நடந்தது. வழக்கு போடுமாறு நான் 1ம் வாதிக்கு அறிவுரை சொல்லியுள்ளேன். 1ம்வாதி தாக்கல் செய்துள்ள ஜீவனாம்சம் வழக்கு எண் எனக்கு தெரியாது. அந்த ஜீவனாம்சம் வழக்கில் நான் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. 2014ம் ஆண்டு கரிம்முதின்

காலமாகிவிட்டார். அந்த இறப்பிற்கு நான் போகவில்லை. வருவாய் கோட்டாட்சியர் விசாரணை செய்து, வாரிசு சான்றை ரத்து செய்தது எனக்கு நேரிடையாக தெரியும். வருவாய் கோட்டாட்சியர் விசாரணையில் நான் எழுத்துமூலமாக வாக்குமூலம் கொடுத்து, கையெழுத்து எதுவும்போடவில்லை என்றால், சரிதான். எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும், 1ம் வாதி கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

**S/d. M. Selvam,**
**I Additional District Judge,**
**Ranipet.**